மிகவும் அவசரம் / தனிக்கவனம்

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை - 600 006

ந.க.எண். 048951 / எம் / இ4 / 2019, நாள் 06.07.2020

பொருள்: பள்ளிக்கல்வி - மத்திய அரசின் உதவித்தொகைத் திட்டம் - தேசிய வருவாய் வழி திறன் தேர்வு (National Means-cum-Merit Scholarship Scheme) 2018-19 மற்றும் 2019-20 ஆகிய ஆண்டுகளில் உதவித்தொகை வழங்கப்படாமல் விடுபட்ட மாணவ / மாணவியர்களின் வங்கிக்கணக்கு விவரங்களை சரிபார்த்து நடைமுறையில் வைத்தல் - சார்ந்த விவரங்களை 10.07.2020 **அன்று மாலை 5 மணிக்குள்** அனுப்பிவைத்தல்- சார்பு.

பார்வை: மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் 01.07.2020 தேதியிட்ட மின்னஞ்சல்.

பார்வையில் காணும் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் மின்னஞ்சலின்படி கடந்த 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளில் தேசிய வருவாய் வழி மற்றும் திறன் தேர்விற்கான NMMSS கல்வி உதவித்தொகை தகுதியுள்ள மாணவ மாணவிகளுக்கு MHRD மூலம் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இதில் இவ்வுதவித்தொகை கிடைக்கப்பெறாத மாணவ / மாணவியர்களின் வங்கிக்கணக்கு விவரங்களை சரிபார்த்து நடைமுறையில் வைக்குமாறு அறிவுறுத்திட மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையின் மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொடுக்கப்பட்டுள்ள இணைப்பில் தங்கள் மாவட்டத்தில் கடந்த 2018-19 மற்றும் 2019-20 ஆண்டுகளில் தேசிய வருவாய் வழி திறன் தேர்விற்கான (National Means-cum-Merit Scholarship Scheme) NMMSS கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தவர்களில் குறிப்பிட்ட சில மாணவ / மாணவியர்களின் வங்கிக்கணக்கில் உதவித்தொகை செலுத்த முடியாதவாறு அவர்தம் வங்கிக்கணக்குகள் செயல்பாட்டில் இல்லையெனவும் அக்கணக்குகளை சரிபார்த்து நடைமுறையில் வைக்குமாறும் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலமாக அம்மாணவ / மாணவிகளை அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இப்பணி முடிக்கப்பட்ட தகவல்களை 10.07.2020 அன்று மாலை 5 மணிக்குள் இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு (jdnsed@nic.in) தவறாமல் அனுப்பி வைக்குமாறு மீளவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதில் எவ்வித சுணக்கமும் இன்றி செயல்பட்டு மாணவர்களின் வங்கிக்கணக்கு விவரங்களை சரிபார்த்து உதவித்தொகைக்கு தகுதியுடைய அனைத்து மாணவ மாணவிகளும் பயனடைய ஆவன செய்யுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

06/07/2020

இணைப்பு: அட்டவணை 1, 2 மற்றும் 3.

பெறுநர்:– அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்/
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்:– அரசு முதன்மைச் செயலாளர்
பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9
– அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.